1979 ஏப்ரல் 16]

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு சிறப்பூதியம்

*வினா எண் 706—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றிய அலுவலக அரசு பணியாளர்களில் யார் யாருக்கு சிறப்பூதியம் கொடுக்கப்பட்டு வந்ததை நிறுத்தப்பட்டது?

(ஆ) என்ன காரணம்?

(இ) எந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து :-

(அ) தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் எவருக்கும் கொடுக்கப்பட்டு வந்த சிறப்பூதியம் நிறுத்தப்படவில்லை.

(ஆ) & இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி, கே. கோதண்டராமன் : சார். தற்போது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தற்போது இல்லை என்று சொன்னாலும் சென்ற ஆண்டிலேயோ அல்லது இரண்டாண்டுகளுக்கு முன்போ அப்படி நிறுத்தப்பட்டுள்ளதா? அப்படி நிறுத்தப்பட்டிருக்குமேயானால் அதனை மீண்டும் அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முன்பும் இல்லை.

திரு. வி, கே. கோதண்டராமன் ; தலைவரவர்களே, அப்படி இருப்பதாக நிரூபிக்கப்பட்டு அதனை எழுதி அனுப்பினால் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஆவன செய்வதோடு அதனை அமல்படுத்துவதற்கும் ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முன்பு அப்படி நிறுத்தப்படவில்லை என்று சொன்னேன். ஆகவே பின்னதற்கு இடமே இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நடைமுறையிலே இருக்கிறது அது நிறுத்தப்படுகின்ற அளவுக்கு இருக்குமேயானால் அது குறித்து எழுதுகிறார்கள் என்று சொன்னால் அப்போது அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, அதனை அமல்படுத்துமா என்றுதான் தான் கேட்கிறேன்.

[1979 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது, மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இப்போது கொஞ்சம் அதிகமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது ..... (குறுக்கீடு) .... சேர்த்து கொடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இருக்கிறது என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார். இருக்கிறது என்றால் எழுத்து மூலமாக இருக்கிறது என்று எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருக்குக் கிடைத்த உறுதியான தகவலின்படி சொல்கிறார். இருக்கிறது என்று நீங்கள் சொல்வதாக இருந்தால் எழுதிக்கொடுங்கள், நடவடிக்கை எடுப்பது பற்றிப் பதில் சொல்வார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள்

* வினா எண் 707— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1300 சமுதாயக் கிணறுகளை அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது முதல் செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :-

(அ) 1,068 சமுதாயக் கிணறுகள் அமைக்க திட்டமுள்ளது.

(ஆ) முதற்கட்டமாக 1978-79 ஆம் ஆண்டில் 293 சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : கேள்வி தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள் பற்றியது என்றாலும் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்கின்றபோது விவசாயிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை இருப்பதால் அதற்கென்று தனியாகக் குழு அமைத்து விவசாயிகளுக்குப் பாதகமா, சாதகமா என்று அறிந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில்தான் தகவல்கள் இருக்கின்றன. சமுதாயக் கிணறுகள் விவசாயிகளுக்குச் சாதகமாகத்தான் இருக்கும்.